அசல் வழக்கு எண்.184 /2024 நாள்: 07.04.2026

வா.சா.1 திரு. முத்துராசு

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) வழக்கு சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் தர்மபுரம் ஆதீனத்துக்கு சொந்தமானது. நான் எத்தனை வருடமாக குத்தகைக்கு இருந்து வருகிறேன் என்றால் எனது அப்பா காலம் முதல் குத்தகைக்கு இருந்து வருகிறோம். 65 ஆண்டுகளாக தற்போது வரை எனது தந்தை காலம் முதல் எனது காலம் வரை குத்தகைக்கு இருந்து வருகிறோமா என்றால் ஆமாம். எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் 10.04.1999–ல் இறந்தார். முருகையன் யார் என்றால் எனது அப்பா ஆவார். எனது தந்தை பிரதிவாதிகளின் தகப்பனார் மீது தாக்கல் செய்த வழக்கு விவரம் தெரியுமா என்றால் தெரியும், இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.146/98 என்று தாக்கல் செய்திருந்தார். மேற்படி அ.வ.எண்.146/98 ல் என்ன பரிகாரம் கோரப்பட்டது என்றால் இதே வழக்கு சொத்து பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னதால் எனது தகப்பனார் வழக்கு தாக்கல் செய்தார். மேற்படி அ.வ.எண்.146/98–ல் எப்போது தீர்ப்பாணது என்றால் 07.09.1999–ல் தீர்ப்பாணது. எனது தந்தை இறந்தபிறகுதான் தீர்ப்பானது என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

S.d/ Muthurasu

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.07 16:50:33 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU